செய்தி வெளியீடு எண்: 545 நாள் : 30.10.2015

## செய்தி வெளியீடு

### மீன்துறை பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.ஜெயபால் அவர்கள் 30.10.2015 அன்று மீன்துறை ஆணையர் அலுவலகத்தில் மீன்துறை பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியினை துவக்கி வைத்தார்.

அரசு மீனவர்களது நலன் காத்திடவும், அவர்களது சமூக பொருளாதார நிலையை மேம்பாடடையச் செய்திடவும் அறிவிக்கும் பல முக்கிய மற்றும் நாட்டின் முன்னோடித் திட்டங்களை மீனவ மக்களுக்கு கொண்டு சேர்க்கும் பணியினை மீன்வளத்துறை மூலம் செயல்படுத்துகிறது. எனவே மீன்வளத்துறை பணியாளர்களின் திறன் மேம்பாடடையச் செய்வதன் மூலம் அவர்களது பணி சிறக்கவும், மீனவ மக்களுக்கு அரசு திட்டங்கள் உரிய நேரத்தில் சென்றடைவதை உறுதி செய்யும் விதமாகவும், மீன்துறை பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியினை, மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் 30.10.2015 அன்று காலை 10.00 மணியளவில் மீன்துறை ஆணையர் அலுவலகத்தில் துவக்கி வைத்தார். இரண்டு நாள் பயிற்சியாக நடைபெறும் இந்நிகழ்ச்சியில் முதல் நாள் பணியாளர்களும் 31.10.2015 அன்று பணியாளர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடனும் கலந்துகொள்கின்றனர். மீன்வளத்துறையின் அனைத்து பணியாளர்களுக்கும் பல்வேறு தொகுதிகளாக அளிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள இப்பயிற்சியின் முதல் தொகுதியில் 50 பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியை தொடர்ந்து மீன்துறை ஆணையர் அலுவலக பணியாளர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கிட புதியதாக அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு கருவியினை மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மீன்துறை ஆணையர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., மாநில மனநல மருத்துவர் திரு. சி. இராமசுப்பிரமணியன், மீன்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஒம்/– பீலா ராஜேஷ்
மீன்துறை ஆணையர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**